The beginning of Reformed Global Tamil Forum

On Jan 24, 2021, after carefully evaluating the current situation of the Global Tamil Forum (GTF) in our public meeting on Dec 26, 2020, and then in a follow-up meeting on Jan 2, 2021, a committee of 16 members was formed to look further into it. Here are the findings and Recommendations:

1. Global Tamil Forum (GTF) was formed in the latter part of 2009 by 14 Tamil organizations to be a global unifying voice for the Tamil Diaspora. The objectives enshrined in GTF's Constitution include (among others): Tamil Peoples' right to self-determination and restore and reconstitute the sovereignty and the nationhood of the Tamil People in Eelam; Bring to justice those who perpetrated genocide and war crimes against the Tamil people and crimes against humanity; and Humanitarian support to Eelam Tamils. GTF functioned well in the first two years, raising awareness about the war crimes and the Internally Displaced People (IDP) camp. The last active work by GTF was in 2011/12. Subsequently, it deteriorated and became merely a statement-releasing organization. Frustrated by GTF, all the 10 European Tamil organizations and the British Tamil Forum left GTF, leaving it with only 3 organizations in its fold in 2014. No tangible work was carried out by this GTF group after 2015 other than contributing to regime change in Sri Lanka and becoming a UNP / Ranil Wickramasinghe followers! The primary reason for GTF's failure is due to not pursuing justice for genocide and political solution based on self-determination and Tamil sovereignty. GTF lost the confidence of the Tamil people. GTF just opted for a regime change in Sri Lanka, vainly hoping that the new regime would deliver justice and solution. In spite of waiting for 3 years, no progress was made in either justice or political solution. Finally, in 2020, the Australian Tamil Congress and the United States Tamil Political Action Council also quit GTF. Canadian Tamil Congress is the only one left in GTF. Now, GTF is completely dysfunctional other than a few individuals releasing statements on their own!

2. A major problem we found in GTF's failure was the lack of transparency and accountability. Neither the president, nor the spokesperson, nor the small group that controlled GTF has ever changed in the last 10 years! After 2015, when thousands of Tamils toiled, protesting each year at the Geneva sessions, a group of people self-styling themselves as representatives of the Tamil diaspora and voiceless Eelam Tamils had closed-door meetings with diplomats and the Sri Lankan government in secrecy and provided contradicting messages. This made the position of Eelam Tamils weaker in the international arena. The current situation is that a few people and a "spokesperson" employ GTF's name in releasing statements and conducting closed-door meetings with diplomats. None of the inner details gets shared with any other

Tamil organization. Undoubtedly, this will harm the Tamil Diaspora and the Tamil Eelam cause if we don't speak up about it publicly and take necessary corrective action.

3. It is absolutely essential for the Tamil Diaspora to have now a global Tamil organization -- a Federation, like GTF -- that will truly represent the Tamil people because we are seeking justice at international jurisdiction such as the International Criminal Court (ICC), the International Criminal Tribunal for Sri Lanka and the International Independent Investigative Mechanism (IIIM) for Sri Lanka. This effort will require the support of a large number of diaspora Tamils as well as the support at wider global level. Our committee is proposing to form a new organization (Reformed Global Tamil Forum - RGTF) and register it in the USA. The reason is that the USA will have a new government and it already has connections with GTF and hence, it is important to let the USA government know that Tamil Diaspora has formed a new entity with a new mandate. The name RGTF will be temporary for the next 5 years and it can be changed. The fundamentals of Tamil causes (Self-determination, Tamils as a nation, Tamil traditional homeland, and Recognizing the Tamil genocide) will remain unchanged.

4. When forming this new entity, we highly recommend setting a time-bound approach to have it transfer to greater youth participation in 5 years. This will enable the current team to work efficiently and also prepare the Tamil youth effectively for the next leadership.

5. A qualifying organization must accept the RGTF's vision and mission (Self-determination based solution for Eelam Tamils; Recognizing the Tamil genocide; Treat Eelam Tamils as a Nation; Traditional Homeland; and Tamil’s sovereignty) and must be a registered organization in its respective country.

==

உலகத் தமிழ் மன்றத்தின் (Global Tamil Forum) இன்றைய நிலைமைகள் பற்றி ஆராய்வதற்காக 2002-ஆம் ஆண்டு திசம்பர் 26-ஆம் நாள் அன்றும் அதன்பின் இவ்வாண்டு (2021) சனவரி 2-ஆம் நாள் அன்றும் பல நாடுகளைச்சேர்ந்த தமிழர்கள் பலர் பொதுவெளியில் ஒன்றுகூடி நன்றாக ஆராய்ந்தனர். மேலும் இதுபற்றி எதிர்வரும் கிழமைகளில் விசாரணை நடத்தி, நாம் என்ன செய்யலாம் என்பதை அறிவதற்காக 16 உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்த விபரங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதுடன் உங்களுடைய மேலான ஆதரவையும் வேண்டுகின்றோம்.

குழு கண்டறிந்தவைகளும் திட்டங்களும் கீழே தரப்பட்டுள்ளன:

1. உலகம் முழுவதும் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் விழுமிய நோக்குடன் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 14 தமிழ் அமைப்புகள் ஒன்றுகூடி, 2009-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் உலகத் தமிழ் மன்றம் (Global Tamil Forum -- GTF) என்ற அமைப்பை உருவாக்கினார். உலகத் தமிழ் மன்றத்தின் அரசியல் யாப்பில் (Constitution) உள்ள முக்கியமான சிலவற்றை ஈண்டு குறிப்பிடுதல் தேவைப்படுகின்றது: தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமை, மற்றும் ஈழத்தமிழர்களின் சுதந்திரம் தாயகம் ஆகியவற்றை மீட்டு எடுத்து சரியாக அமைப்பது; தமிழர்கள் மீது இனப்படுகொலை செய்தவர்களையும், தமிழர்கள் மீது போர்க்குற்றம் இழைத்தவர்களையும், மனித குலத்துக்கு எதிராக குற்றம் புரிந்தவர்களையும் நீதி விசாரணையின் முன்பு நிறுத்தி தக்க தண்டனை வழங்க வேண்டும்; ஈழத் தமிழர்களுக்கு மனிதநேய அடிப்படியில் அனைத்து உதவிகளையும் நல்குதல். உலகத் தமிழ் மன்றம் தொடங்கிய முதல் இரண்டு ஆண்டுகளில், போர்க்குற்றம் பற்றியும் ஈழத்தில் அகதி முகாம்களில் உழன்று வதியும் மக்கள் பற்றியும் விழிப்புணர்வை அது சிறப்பாகச் செய்தது. ஆனால், உலகத் தமிழ் மன்றம் உருப்படியாகச் செய்த பணி 2011-2012 ஆம் ஆண்டு காலத்துடன் முடிவடைந்துவிட்டது. பின்பு, அது ஒரேயடியாகத் தேய்ந்துபோய், அறிக்கை மட்டும் வெளியிட்டுக்கொண்டு இருக்கும் அமைப்பாக மாறிவிட்டது. இதனால் வெறுத்துப்போய் , ஐரோப்பிய கண்டத்தில் உள்ள 10 உறுப்பு நாடுகளும் மற்றும் பிரித்தானிய தமிழ் மன்றமும் (British Tamil Forum) -- ஆக மொத்தம் 11 உறுப்பு நாடுகள் -- உலகத் தமிழ் மன்றத்தைவிட்டு வெளியேறிவிட்டன. 2014-ஆம் ஆண்டில், உலகத் தமிழ் மன்றத்தில் இருந்தவை மூன்று (3) உறுப்பு நாடுகள் மட்டுமே ! இலங்கையில் ஆட்சி அதிகாரத்தை ஒரு கட்சியில் இருந்து இன்னொரு கட்சிக்கு மாற்றுவதற்கும், ஐக்கிய தேசிய கட்சி (UNP) / ரணில் விக்ரமசிங்கே அணிக்கு அடிப்பொடிகளாக விளங்குவதற்கும் இவர்கள் உழைத்தார்களே தவிர, 2015-ஆம் ஆண்டுக்குப்பின் எந்தவிதமான உருப்படியான செயலையும் இவர்கள் செய்யவில்லை ! உலகத் தமிழ் மன்றம் தோல்வியடைந்ததற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், அது தமிழினப் படுகொலைக்கான நீதி வேண்டுவதையும் தன்னாட்சி அடிப்படையில் தமிழர்களின் சுதந்திரத்துக்கான அரசியல் தீர்வையும் தொடர்ந்து முன்னெடுப்பதற்குப் பதிலாக அவற்றைக் கைவிட்டது தான். புதிய ஆட்சி பதவிக்கு வந்தால் தமிழர்களுக்கு நீதியும் கிடைக்கும் அரசியல் தீர்வும் கிடைத்துவிடும் என்ற வீண் நம்பிக்கையில் இலங்கையில் ஆட்சி மாற்றத்தை உலகத் தமிழ் மன்றம் எதிர்பார்த்தது. ஆனால், நடந்தது என்ன ? மூன்று ஆண்டுகள் காத்து இருந்தும் தமிழர்களுக்கு நீதியோ அரசியல் தீர்வோ எதுவுமே கிடைக்காமல் இலவு காத்த கிளியின் கதைபோல் முடிந்துவிட்டது. இறுதியாக, சென்ற ஆண்டில் (2020-ஆம் ஆண்டில்) அவுஸ்திரேலிய தமிழ் கழகம் (Australian Tamil Congress), அமெரிக்கத் தமிழ் அரசியல் செயலகம் (United States Tamil Political Action Council) இரண்டும் உலகத் தமிழ் மன்றத்தில் இருந்து வெளியேறிவிட்டன. இப்பொழுது உலகத் தமிழ் மன்றத்தில் இருப்பது கனேடிய தமிழ் கழகம் (Canadian Tamil Congress) ஒன்று மட்டுமே ! இப்பொழுது, ஒரு சில தனிப்பட்டவர்கள் தான்தோன்றித்தனமாக அறிக்கை வெளியிட்டுக்கொண்டு இருப்பதைத் தவிர, உலகத் தமிழ் மன்றம் செயல் அனைத்தையும் முழுவதுமாக இழந்து ஒன்றும் இல்லாமல் போய்விட்டது.

2. உலகத் தமிழ் மன்றம் அழிந்து உருப்படாமல் போனதற்கு முக்கியமான காரணம் அவர்களிடம் வெளிப்படைத்தன்மை இல்லாமையும் பொறுப்பை அவர்கள் சரியாக ஆற்றினார்களா என்று அவர்களை யாரும் கேள்வி கேட்காமையுமே ஆகும். கடந்த 10 ஆண்டுகளில், தலைவரோ, ஊடகப்பேச்சாளரோ, அல்லது உலகத் தமிழ் மன்றத்தைக் கைக்குள் வைத்திருந்த சிறு குழுவினரோ மாறவே மாறாமல், அவர்களே தொடர்ந்து பதவியில் இருந்துள்ளனர். 2015-ஆம் ஆண்டுக்குப்பின், பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் ஜெனிவா நகரில் போராட்டத்தில் ஈடுபட்டு உழன்று கொண்டிருந்தபோது, புலம்பெயர்ந்த தமிழர்கள் அனைவருக்கும் மட்டும் அல்லாது ஈழத்தில் இருக்கும் பேச்சுரிமையற்ற / குரல்வளை நசுக்கப்பட்ட தமிழர்களுக்கும் சேர்த்து ஒட்டுமொத்தப் பிரதிநிதிகள் என்று தங்களுக்குத் தாங்களே முடிசூட்டிக்கொண்ட ஒரு குழுவினர் உலக நாடுகளின் அரச தூதர்களுடனும் (Diplomats) இலங்கை அரசுடனும் மூடிய தனி அறைக்குள் கமுக்கமாக (ரகசியமாக) கூட்டங்கள் நடத்துவதிலும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட அறிக்கைகள் வெளியிடுவதிலும் ஈடுபட்டனர். இந்தச் செயல் ஈழத்தமிழர்களை உலக அரங்கில் மிகவும் கீழ் நிலைக்கு இட்டுச்சென்றது. இப்பொழுது இருக்கும் அவல நிலை என்னவென்றால், ஒரு சில தனிப்பட்டவர்களும் "ஊடகப்பேச்சாளர்" என்று தன்னைப்பற்றிக் கூறிக்கொள்பவரும் உலகத் தமிழ் மன்றத்தின் பெயரைத் தவறாகப் பயன்படுத்தி, தான்தோன்றித்தனமாக அறிக்கை வெளியிடுவதுடன் அரச தூதர்களுடன் மூடிய தனி அறைக்குள் ("இருட்டு அறைக்குள்") கமுக்கமாக/ரகசியமாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகின்றனர். உள்ளே இவர்கள் நடத்தும் ரகசியங்களை (மறைபொருட்களை) எந்தவொரு தமிழ் அமைப்பிடமும் இவர்கள் பகிர்ந்துகொள்வது கிடையாது. இவற்றையெல்லாம் வெளி உலகத்தின் பார்வைக்குத் தெரிவிக்காமலும், தக்க நடவடிக்கை எடுத்து இவற்றையெல்லாம் சரி செய்யாமலும் வாழா இருந்தால், புலம்பெயர்ந்த தமிழர்களின் நலனுக்கு மட்டும் அல்லாது தமிழீழத் தாயகத்தின் விடுதலைக்கும் பெரும் தீங்கு ஏற்படும் என்பது திண்ணம்.

3. அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் (International Criminal Court - ICC), இலங்கையை விசாரணை செய்வதற்கென்றே தனியாகஅமைக்கப்படும் அனைத்துலக குற்றவியல் நீதி ஆணையம் (InternationalCriminal Tribunal for Sri Lanka), மற்றும் இலங்கை அரசு புரிந்துள்ள தமிழினப் படுகொலையை விசாரிப்பதற்கென்றே இலங்கை மீதான அனைத்துலகத் தனி விசாரணைப் பொறிமுறை (International Independent Investigative Mechanism (IIIM) for Sri Lanka with a specific mandate and Terms of Reference (ToR) to determine genocide) போன்றவைகள் வாயிலாக நீதி வேண்டுவதால், தமிழர்களை உண்மையாகவே பிரதிநிதிப்படுத்தும் ஒரு தமிழ் அமைப்பு -- உலகத் தமிழ் மன்றம் போன்ற ஒரு பேரவை (கூட்டமைப்பு) -- புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கு மிகவும் தேவைபடுகின்றது; இது காலத்தின் கட்டாயம்.   இந்த முயற்சிக்கு புலம்பெயர்ந்த தமிழர்களின் பேராதரவுடன் உலகின் மற்ற பகுதிகளிடம் இருந்தும் ஆதரவு தேவைப்படுகின்றது. ஆகவே, சீரமைக்கப்பட்ட உலகத் தமிழ் மன்றம் (Reformed Global Tamil Forum - RGTF) என்ற பெயரில் ஒரு புதிய அமைப்பு தொடங்கவேண்டும் என்றும் இந்த அமைப்பை/மன்றத்தை அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பதிவு செய்யவேண்டும் என்றும் இந்தக் குழு பரிந்துரை செய்கின்றது. காரணம்: அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஆட்சிக்கு வர உள்ள புதிய அரசு உலகத்

தமிழ் மன்றத்துடன் தொடர்பில் உள்ளது; இதுவரை இருந்த உலகத் தமிழ் மன்றத்துக்குப் பதிலாக புதிய அமைப்பை/மன்றத்தை (RGTF) புலம்பெயர்ந்த தமிழர்கள் உருவாக்கியுள்ளனர் என்பதை இந்தப் புதிய அரசுக்குத் தெரிவிக்க வேண்டியது மிகவும் முக்கியம். சீரமைக்கப்பட்ட உலகத் தமிழ் மன்றம் (RGTF) என்ற பெயர் அடுத்த 5 ஆண்டுகள் வரை தற்காலிகமாக இருக்கும்; அதன்பின், வேண்டியவாறு பெயர் மாற்றம் செய்துகொள்ளலாம். தமிழர்களின் தன்னாட்சி உரிமை, தமிழர்கள் தனி நாட்டுக்கு உரிமை உடையவர்கள், தமிழர்களின் பாரம்பரியமான தாயக நிலம், தமிழர்கள் மீது நடத்தப்பட்ட இனவழிப்புக்கு நீதி ஆகிய அடிப்படைகளில் எவ்வித மாற்றமும் இருக்காது.

4. புதிய அமைப்பை/மன்றத்தை ஏற்படுத்தும் இவ்வேளையில், அடுத்த 5 ஆண்டுகளில் இளைஞர்கள் பெரும் அளவில் இந்த புதிய அமைப்பில் பங்குபெறுவதற்கு ஏற்ப RGTF- இன் காலவரையறையை இப்பொழுதே முடிவு செய்யவேண்டும் என்று இந்தக்குழு பெரிதும் பரிந்துரை செய்கின்றது. இப்பொழுது/இனி அமையவுள்ள குழு சிறப்பாக செயலாற்றுவதற்கு இது வழிவகையாக இருப்பதுடன் எதிர்காலத்தில் இந்தப் புதிய அமைப்பை/மன்றத்தை மிகவும் திறமையுடன் நடத்துவதற்கு ஏற்ற தலைமைத் தன்மையுடன் இளைஞர்களைத் தயார்படுத்தவும் உதவி புரியும்.

5. சீரமைக்கப்பட்ட உலகத் தமிழ் மன்றத்தில் (RGTF) உறுப்பினராக சேரவிரும்பும் தமிழ் அமைப்பு, அது அமைந்துள்ள நாட்டில் முறையாகப் பதிவு செய்யப்பட்டதாக இருத்தல் அவசியம் என்பதுடன், RGTF-யின் குறிக்கோள்கள் (ஈழத்தமிழர்களுக்கான தீர்வு தன்னாட்சி அடிப்படையில் மட்டுமே உண்டு; தமிழர்கள் மீது ஏவப்பட்ட படுகொலையை நினைவில் நிலைநிறுத்தல்; ஈழத்தமிழர்கள் தங்களுடைய தனி நாட்டுக்கு உரிமை உடையவர்கள்; வரலாற்று அடிப்படையிலான தமிழர் தாயகம்; தமிழர்களின் அரசுரிமை/கோன்மை) அனைத்தையும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

மிக்க நன்றி

உலகத் தமிழர்களின் 16 உறுப்பினர் அடங்கிய சீரமைப்புக் குழு சார்பாக